# மெட்ரோ ரயில் சேவை: 3 நாளில் 23,354 பேர் பயணம்

**சென்னை, செப்.10:** சென்னையில் மெட்ரோ ரயில் சேவையில் கடந்த 3 நாள்களில் ( செப்.7 முதல் செப்.9 வரை) மொர்த்தம் 24,354 பேர் பயணம் செய்துள்ளதாகவும், புதன்கிழமை (செப்.9) மட்டும் 13,980 பேர் பயணம் செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையில் 5 மாதங்களுக்கு பிறகு மெட்ரோ ரயில் சேவை கடந்த திங்கள்கிழமை (செப்.7) தொடங்கியது. முதல்கட்டமாக, விமான நிலையத்தில் இருந்து வண்ணாரப்பேட்டைக்கு மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன. இதையடுத்து, பரங்கிமலை மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து கோயம்பேடு வழியாக சென்னை சென்ட்ரல் மெட்ரோ நிலையத்துக்கு செப்.9-ஆம் தேதி முதல் மெட்ரோ ரயில்கள் இயக்கப்பட்டன.

இந்நிலையில், சென்னை மெட்ரோ ரயில் சேவையில் முதல் 3 நாள்களில் (செப்.7 முதல் 9 வரை) மொத்தம் 24,354 பேர் பயணம் செய்துள்ளனர். புதன்கிழமை மட்டும் 13,980 பேர் பயணம் செய்துள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியது:

கடந்த மூன்று நாள்களில் மொத்தம் 24,354 பேர் பயணம் செய்துள்ளனர். செப்டம்பர் 9-ஆம் தேதி வரை, திறன் அட்டை பயணச்சீட்டு(ஸ்மார்ட் கார்டு டிக்கெட்) முறையைப் பயன்படுத்தி 11,091 பேரும், கியூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையைப் பயன்படுத்தி 325 பேரும் மெட்ரோ ரயில்களில் பயணம் செய்துள்ளனர்.

பயணிகள் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் கைபேசி செயலியை பதிவிறக்கம் செய்து, கியூஆர் குறியீடு பயணச்சீட்டு முறையை பயன்படுத்திக்கொள்ளலாம். டிக்கெட் கவுன்ட்டர்கள் மற்றும் பயணச்சீட்டு வழங்கும் கருவிகளுக்கு முன்னால் நீண்ட வரிசையில் பயணிகள் நிற்பதைத் தவிர்ப்பதற்காக, அதி நவீன தானியங்கி பயணச்சீட்டு சான்றளிக்கும் இயந்திரங்கள் (டிராவல் கார்டு ரீடர்) அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் நிறுவப்பட்டுள்ளன. இருப்பினும், தவிர்க்கமுடியாக நிலையில் தேவையின் அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்டு டோக்கன்கள் வழங்கப்படும்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை:** அனைத்து சுரங்கப்பாதை மெட்ரோ ரயில் நிலையத்திலும் குளிர்சாதன வசதிகளை பாதுகாப்புடன் இயக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**கியூ ஆர் குறியீடு பயணச்சீட்டில் 20% கட்டணம் தள்ளுபடி:** மெட்ரோ ரயிலில் பயணிப்பதற்காக கியூ ஆர் முறையில் எடுக்கப்படும் பயணச்சீட்டில், வியாழக்கிழமை முதல் 20 சதவீத கட்டணம் தள்ளுபடி செய்யப்படுவதாக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அறிவித்துள்ளது. ஒரு முறைப் பயணம், குழுப் பயணம் உள்ளிட்ட அனைத்து மெட்ரோ ரயில் பயணங்களுக்கும், கியூ ஆர் குறியீடு மூலம் பெறும் பயணச்சீட்டுக்கு கட்டணச் சலுகை பொருந்தும்.